சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
OS.No. 1413 / 2022

வா.சா.1. தங்கபாண்டி 18.06.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

புல எண்.182/2, 182/3, 182/4 ஆகியவற்றிற்கு தனித்தனியாக விஸ்தீரணம் தெரியாது என்று சொன்னால் சரிதான். புல எண்.182/3-ல் உள்ள கேணிக்கான மின் இணைப்பு எண் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த கேணியின் நீளம், அகலம், ஆழம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புல எண்.182/3 கேணியில் இருந்து நிலத்திற்கு வாய்க்கால் மூலம் நீர்பாய்ச்சப்படுகிறதா அல்லது குழாய் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறதா என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. குழாய் மூலம் நீர்பாசனம் செய்யப்படுகிறது. சர்வே எண்.184/3 நிலம் யு.டி.ஆர். சமயத்தில் அளவீடு செய்யப்பட்டு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புலஎண்.184/3 நிலத்தில் வேறு யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரிதான். புல எண்.184/3, 182/2 நிலங்களை நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அளவீடு செய்யும் பொழுது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நான் டெய்லர் தொழில் 50 ஆண்டுகளாக செய்து வருகிறேன். பிரதிவாதிகள் தாவா நிலத்தில் கடந்த காலங்களில் என்ன பயிர் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதி தங்கராஜ் புல எண்.182/3-ல் வெட்டிய கேணிக்கு வாங்கிய கடனை எப்போது திருப்பி அடைத்தார் என்றும் எந்த வழியில் திருப்பி அடைத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புல எண்.179/2-க்கும் எனக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். ஒட்டன்சத்திரம் தாராபுரம் சாலையில் அமைந்துள்ள பட்ஸ் பள்ளியின் தாளாளர் பொன்கார்த்திக் எனது உறவினர் என்றால் சரியல்ல. எனது மகன் பெயர் சரத்பாபு. சரத்பாபு பட்ஸ் பள்ளியில் நிறைய பணிகளை செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நானும் எனது மகனும் ஒரே குடும்பமாக தான் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம். எனக்கும் எனது மகனுக்கும் இடையே சுமுகமான உறவு இருந்து வருகிறது என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதி தங்கராஜ் பொன்கார்த்திக்கு அவரது நிலத்தை கிரையம் செய்ய இருந்ததை அறிந்து தான் நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். பொன்கார்த்திக்கு நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதியின் நிலத்தை எனது மகன் முன்னின்று பொன்கார்த்தி அவர்களுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2-ம் பிரதிவாதி அவரது நிலத்தை பொன்கார்த்திக்கு கிரையம் கொடுக்கிறார் என்று யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் என் நண்பர் எனக்கு சொன்னார். அந்த நண்பர் பெயர் தற்போது எனக்கு

ஞாபகமில்லை. புல எண்.184/3 நிலத்தை நான் கிரையம் செய்யும் பொழுது அதை கிரயம் பெற்ற நபர்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து கையெழுத்து செய்து தருமாறு கேட்டதன் பேரில் அனைவரால் கையெழுத்து செய்து கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.179/2 நிலத்தை பரிவர்த்தனை செய்யும் பொழுது மேற்படி நிலத்தை பரிவர்த்தனை பெற்றவர்கள் பரிவர்த்தனை ஆவணத்தில் எங்கள் குடும்பத்தில் அனைவரும் கையெழுத்து செய்யுமாறு கேட்டதன் பேரில் அனைவராலும் கையெழுத்து செய்யப்பட்டு பரிவர்த்தனை பத்திரம் எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான்.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.06.18 17:46:00 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்